RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2112

# தொல்காப்பியம் உணர்த்தும் மெய்யியல்

ரா. பிரபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631501, தமிழ்நாடு, இந்தியா.

# Philosophy in Tolkappiyam

R. Prapa [a, *]

[a] Department of Tamil, Pachaiyappa's college for women, Kancheepurm-631501, Tamil Nadu, India

* Corresponding Author: Prapasairam@gmail.com

Received: 19-08-2022
Revised: 15-10-2022
Accepted: 23-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

Tolkappiyam is a text that can be understood in all times by underpinning the tradition. This text contains all the norms that a human being must follow in his or her life. 'Philosophy' is essential to understand and act on the principle such as thoughts, actions and so on. Human ecology can be recognized in the form of the three concepts and by approaching them with specific thoughts, it is possible to know the actual situation which they undergo. This article tells us that we should live with morals. And it describes the natural ideas discovered through human thought that it answers 160 questions that have arisen in human thought. The manifestation of this philoshopy is explored through the text Tolkappiyam.

**Keywords:** Philosophy, Department, Tolkappiyam things, Default characters.

## முன்னுரை

மெய்யியல் என்பது இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியின் மீது ஆட்சி செய்யும் மிகப்பொதுவான விதிகளைக் குறித்த அறிவியலே மெய்யியல் எனப்படும். ஏற்கனவே இருப்பது அறிவு, விழுமியம், காரணம், மனம், மொழி தொடர்பான பொதுவானதும் அடிப்படையானதும் ஆகும். மனிதச் சிந்தனையின் வழியாக கண்டறியப்படும் உண்மையான, இயல்பானக் கருத்துக்களின் தொகுப்பு. மனித சிந்தனையில் தோன்றிய 160 கேள்விகளுக்கு விடைதேடுவது மெய்ம்மையாகும். இம்மெய்ம்மையின் வெளிப்பாட்டை தொல்காப்பியச் சூத்திரத்தின் வழியாக ஆராயப்படுகிறது.

## மெய்மை என்றால் என்ன?

மனிதனின் ஆழ்மனச் சிந்தனையில் ஏன் மெய்ம்மையை நோக்கி நகருகிறது என்றால் உயிர் வாழ்க்கை, இனப்பெருக்கம் இரண்டு மட்டுமே ஒருவனுடைய வாழ்க்கையாகாது. தான் யார்? தனக்கும் சூழலுக்கும் என்ன தொடர்பு? என்பதனின் தேடலே மெய்ம்மையாகும். இந்த கேள்விகளின் விடைகளைத் தேடிப் பயனிப்பது தான் மனிதனின் சாரமான இயல்பு (Sivanda Moorthy, Antordias, 1998). இம்மெய்ம்மை இல்லையென்றால் மனிதன் பிறவி நிலையை எட்டவில்லை என்பது பொருள். இம்மாறுதலான சிந்தனையே மற்ற பிறவிகளுக்கும் (உயிரினங்களுக்கும்) எட்டுவதில்லை என்றும் அவைகள் ஆழ்ந்த சிந்தனைக்கும் செல்வதில்லை என்பதனையும் உணர்த்துகிறது. இப்புலம் என்பது மிகப்பெரிய இடம் என்றும், இம்மெய்ம்மையானது ஒருவரையறையும் இல்லாத பல்வேறு வகையான மனிதச் சிந்தனைக்கு பதிலளிக்கக்கூடியது.

## மெய்மையின் பொருள்

மெய்மை என்பது நாம் வாழும் காலத்திற்கும் மட்டும் பொருந்தாது என்றும், அது முக்காலங்களுக்கு பொருந்தக்கூடிய கருத்தாகும். ஆகவே முக்காலங்களிலும் புலப்பட்டு நிற்பது வினைச் சொல் அல்லது வினைத்தொகை என்பதும் நாம் அறிந்ததே.

மெய்+இயல் = மெய்மை + இயல்

மெய் = நிலத்தன்மை, பல்வேறு சூழ்நிலையில் இருப்பது

இயல் = இயற்கை, ஏற்கனவே இருக்கக்கூடியது, இயம்புதல்

மெய், இயல் ஆகிய இரண்டு சொற்களும் பன்னெடுங் காலத்திற்கு முந்தைய, அப்பாற்பட்டு காலம் கடந்து நிற்பவை என்றும் வழக்யொழியாமல் நிலைத்து நிற்பதும் மெய்மையாகும். முக்காலங்களுக்கான சூழ்நிலைகளிலும் நிகழ்த்தப்பட்ட நிகழ்வுகளையும், சூழல்களையும், உணர்ந்தோ, அறிந்தோ உள்வாங்கிக் கொண்டு பதிவு செய்தவை.

## தமிழர்களின் மெய்யியல்

தமிழர்களுக்கு மொழி வழக்கு ஆதிகாலம் தொட்டே இருந்திருக்கிறது என்றும் இன்றைக்கும் அதனைச் செறிவானப் போற்றத்தக்க சான்றாக விளங்கக் கூடியதுமான தொல்காப்பியம் 2500 முன்பே தோன்றியது. இத்தமிழ் கழகம் முன்றில் முதல் கழகம் கடற்கோளுக்கு இறையாகியுள்ளது என்றும், இரண்டாம் காலத்தில் தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இந்நூலின் பாயிரம் செறிவினும் செறிவாகப் பதியப்பட்டுள்ளது. இப்பாயிரம் எந்தமொழிக்காக, எந்த மொழி பேசும் மக்களுக்காக எழுதப்பட்டது என்பதையும் குறிக்கிறது.

“வடவேங்கடத் தென்குமரி

ஆயிடைத்

தமிழ்கூறு நல்லகத்து

வழக்குஞ் செய்யுளும், ஆயிரு முதலின்

எழுத்துச் சொல்லும் பொருளும் நாடிச்

செந்தமிழ் இயற்கை சிவணிய நலத்தொடு

புலந் தொகுத் தோனே போக்கறு பனுவல்

நிலந்தரு திருபிற் பாண்டியன் அவையத்து

அறங்கரை நாவின் நான்மறை முற்றிய

அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து

மயங்கா மரப்பின் எழுத்துமுறை காட்டி

மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த

தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்

பல்புகழ் நிறுத்த படிமை யோனே”

வடவேங்கடமும், தென்குமரியும் இம்மொழியின் எல்லையைக் குறிக்கிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நல்லுலுகத்திற்கு உகந்ததாகவும் விளங்குகிறது. உலக வழக்காறுகளையும், செய்யுளையும் அடிப்படையாகக் கொண்டது. எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றோடு சமூக கட்டமைப்பு, அறிவார்ந்தவர்களும், ஆட்சியாளர்களும் கொண்டுயெழுந்த வடிவமைப்பினையும் குறிப்பதாகும்.

செம்மையான, இயற்கையானச் சூழல் நிகழக்கூடிய நிலத்தில் காலத்தால் அறுதியிட்டுக் கூறமுடியாத முறைகளை வைத்து தொகுத்து, பல்வேறு காலத்துக்கும் பொருந்தக்கூடிய வகையில் அவ்விலக்கணங்களை முறைப்பட ஆராய்ந்து, குற்றங்களைத் தவிர்ந்த ஒரு பனுவலை பாண்டியன் அவையின்கண் அறத்தை மட்டும் உள்ளீடாகக் கொண்ட நான்மறை முழுவதும் கற்றறிந்த அதங்கோட்டு ஆசான் என்பவனிடம் எழுத்துக்களின் முறைகளின் மயக்கம் கொள்ளாதலின், விதியினைப் பற்றி மிக்க நீரையுடைய கடலினை எல்லையாகக் கொள்ள இவ்வுலகத்தில் தமிழர்களின் ஆதிக்கொள்கையினை அறிந்து கொண்ட தொல்காப்பியரால் பல்வேறு புகழ்கொண்ட இப்பனுவல் இயற்றப்பட்டுள்ளது (Sundaramoorthy, 1985).

## தொல்காப்பியரும், மெய்யியலும்

தொல்காப்பியம் என்பது தொல்+காப்பு+இயம்=தொல் என்பது பழமையான அல்லது தொன்மையான பல்வேறு இயல்பானக் கருத்துகளைக் காத்து இயற்றப்பட்ட நூல் என்பது கருத்தாகும். பல்வேறு இயல்பான கருத்துக்களையும், வழக்கினையும் காத்து இயற்றப்பட்ட ஒருபுலம் என்பதால் இதன் தலைப்பில் ஒரு மெய்யியல் நூலாகக் கருதப்படுகிறது. இதனை ஒரு மீட்யெழுச்சி என்று கூறுவாரும் உளர். நம்மையும் நம் வழக்காறுகளையும் மீட்டெடுத்த இன்றையச் சூழலில் ஒரு நூலாகக் கருதப்படுகிறது. இயம்-என்பது மெய்யியலின் ஆதிச் சொல்லாகவும் கொள்ளப்படுகிறது.

“வினையி னீங்கி விளங்கிய வறிவின்

முனைவன் கண்டது முதனூலாகும்”

இச்சூத்திரத்தின் சாரம்தான் மெய்யியல் இதில் மூன்று காலத்திற்கு பொருந்தக் கூடியதாய், எவ்வித வேறுபாடு இல்லாமலும் தோன்றக்கூடிய வினையில் இருந்து நீங்கி, இவ்வரையறைக்குள் உட்படாத இடக்காலப் பகுப்புக்குள் அடங்காத ஒருவர் தான் முனிவன். அவன் இயற்றியது தான் முதனூல் ஆகும். இம்முதனூல் எப்பகுப்புகளுக்குள்ளும் உட்படாததுதான் ‘மெய்’ ஆகும். அதாவது அதாவது உண்மையின் ஒரு நிலைதான். எக்காலத் திட்டமிடலும் இல்லாமல் நன்மை தீமையினை விட்டொழித்து இயற்றுவது தான் முதனூல் ஆகும். இங்கு தொல்காப்பயித்தின் முந்நூலாக ஐந்திறத்தைக் கொண்டுள்ளது. வினை என்பதினை விளக்க, வினையியலில் முதற்சூத்திரமாகக் எடுத்துரைக்கிறார். அதனை,

“வினையெனப்படுவது வேற்றுமைக் கொள்ளாது

நினையும் காலைக் காலமொ(டு) தோன்றும்”

இச்சூத்திரத்தில் வினை என்பது எந்தவித வேறுபாடும் இல்லாது, முக்காலத்திற்கு ஏற்கத்தக்கதாக நிறுவுவதாக அமைவது என்பது மெய்யியல். இதனை சொல்லிலக்கண வழியாற் கொள்ளும் போது வேற்றுமை யுருபுகளை ஏற்றுக் கொள்ளாது என்ற பொருண்மையில் புலப்படுகிறது. அவ்வினையினை நீங்கிய ஒருவனால்தான் எந்த காலவரைக்கும் உட்படாத முனிவன்தான் முதனூல் இயற்றக் கூடியவன், காலத்திற்கேற்றாற் போல் பொருந்தக்கூடிய மாற்றத்தினை இல்லதோர் உண்மையை உரைப்பவன் ஆதலால் இது மெய்மையை தனியாகக் கொண்டுள்ளது. இவ்வறிவினைக் கொண்டு திகழ்பவர்கள் தமிழர்கள் ஆதலால் தான் தமிழர்களின் தொன்மை என்பது சிறந்ததாகக் உணரப்படுகிறது (Sundaramoorthy, 1985).

ஒரு தனி மனிதனுக்கும், சூழலுக்குமான உண்மையான உறவுநிலையில் நின்று நாம் மெய்மையை நோக்குங்கால் உயிருள்ளவற்றினோடும், உயிரற்றவற்றினோடும் எவ்வித உறவுநிலை என்பதை விளங்குவதே மனிதச் சிந்தனையின் மேம்பாட்டின் உச்சமாகும். இந்நூலில் தமிழர்களின் மரபு இயல்பான இயற்கையான வழிமுறைகளின் நெறியில் பயணித்து இங்கு உணர்த்துகிறது. இப்பனுவலின் பல்வேறு மெய்யியல் கூறுகள் புடமிட்டு இருந்தாலும் நமக்கும், நம்மைச் சார்ந்தோருக்கும் எளிதில் விளங்கக்கூடியது, யாவரும் அறிந்தது ‘பொருளதிகாரம்’ என்றும் வாழ்வியல் இலக்கணத்தையும், செய்யுளிலக்கணத்தையும் எடுத்தியம்பக் கூடியப் பகுதியாகும்.

## பொருதிகாரத்தைச் சூழலும் மெய்யியல்

இவ்வதிகாரத்தில் தொட்டுப் பார்க்கும் இடமெல்லாம், பட்டுத் தெரிக்கிறது மெய்மை. இவ்வதிகாரத்தின் முதல் இயலான அகத்திணையியலில் முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருளின் தன்மையில் மெய்க்கற்றினைக் கொண்டு விளங்குகிறது. இச்சூத்திரத்தில் பொது சூழலின் கட்டமைப்பு, உயிரின வகைகளின் தன்மை, தமிழர்களின் சமூகப் பிரிவுகள், ஒவ்வொன்றிற்கும் அடிப்படை ஒழுங்குகள் கொண்டு இவ்வதிகாரம் பயணிக்கிறது. இவ்வதிகாரம் முழுமையும் 'மெய்யியல்' என்ற புலத்தை உள்ளடக்கியே உள்ளது.

அகத்திணை என்பது 'கைக்கிளை முதலாக பெருந்திணை ஈறாக' எழுதிணையாகும். அகத்திணைகளில் முந்தியது கைக்கிளை, பிந்தியது பெருந்திணை. இவ்வகத்திணை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற அமைப்பில் பல்வேறு இலக்கியங்களின் வகைமைக் கூறியுள்ளது. ஆனால் தொல்காப்பியம் முல்லைக் குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற அமைப்பில் பதிவு செய்துள்ளது. இதனை,

"மயோன் மேய காடுறை யுலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

'காடுறை' என்பது காடு உறைந்து கொண்டிருக்கும் இடத்தையும், அதன் இயல்பையும் குறிக்கிறது. 'மைவரை' குறிஞ்சிக்குரிய பொருளாகக் கொள்ளப் படும்போது 'மை' என்ற சொல் குளிர்ச்சியான, இருளடர்ந்த மலை' என்று கருத்தாகிறது. 'தீம்புனல்' என்னும்போது மிகுதியான வெள்ளம் (நீர்) மாய்த்துக் கொண்டே இருக்கக்கூடிய பகுதியாகும். அது தேக்கி வைக்கக்கூடிய நீரை தேக்கி வைக்கக்கூடிய இடமல்ல. பாய்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதியாகும். 'பெருமணல்' என்பது கடற்பரப்பின் மிது நீர் எச்சூழலிலும் உள்வாங்கிக் கொண்டு செல்லும் அப்படிச் செல்லும்போது மிகுதியான நிலப்பரப்பின் மீது மிகுதியான மணற் பரப்பினை விட்டுச் செல்லும் அவ்வகையான இயல்பினையே இச்சொல்லானத உரைக்கின்றது. இதைத்தான் நால்வகை நிலமெனச் சொல்' சொல்லிய முறையாற் 'சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்ற அடியின் வாயிலாக இந்நான்கு வகையின் நிலத்தின் இயல்பான கற்றறிந்தோர்கள் மிகத் தொன்மையாக சொல்லப்பட்டுள்ளது எனும் கருத்தினை உணர முடிகிறது (Sundaramoorthy, 1985).

ஆனால் நால்வகை நிலத்தோடு, பாலை என்பதினை தனிநிலமாகக் கொள்ளாமல்விட்டதால் ஐந்திணைகள், ஐவகை நிலங்கள் என்பதினை சில ஆய்வாளர்கள், உரையாசிரியர்களின் தோன்றுதல்களுடன் என்கின்றனர். தொல்காப்பியத்தின் கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய், நிழற்படக் கிளந்த எழுத்தணை என்ப என்னும் சூத்திரத்தின் வாயிலாக பாலைத் திணையையும் உள்ளடக்கிய சிந்தனையைத் தான் கொள்ளமுடியும்.

"ஆனால் அதற்கு அடுத்த சூத்திரத்தில்,

நடுவண் ஐந்தினை நடுவனது யொழிய

படுதிரை வையம் பாத்தியப் பண்பே"

நடுவில் இருக்கக்கூடிய ஐந்திணைகளில் 'நடுவனதுயொழிய' நடுவில் இருக்கக்கூடிய 'பாலை' ஒழிந்த எஞ்சிய நான்கு நிலங்களுக்கும் கடலைத் திரையாகக் கொண்ட இவ்வுலகத்தின் பண்பாகும், ஆகவே எண்ணிக்கையில் ஒன்றாக மட்டும் பாலை நிலம் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றின்

அடிப்படையில் முதல், கரு, உரி என்ற பகுப்பு நிலையில் இயல்புகள் வரையறுக்கப்பட்டுள்ளது (Sundaramoorthy, 1985).

## முப்பொருள்கள்

முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருள்களின் இயல்புத் தன்மையை நாம் அறிகிறோம்.

"முதல்கரு உரிப்பொருள் என்றே மூன்றே

நுவலும் காலை முறை சிறந்தனவே

பாடலுள் பயின்றவை பாடுங் காலை"

இம்மூன்று பொருள்களும் அவற்றின் இயல்புதான் முப்பொருள்கள் என்றும், அதனை பயின்றவர்கள் சொல்லக்கூடிய கருத்தாகவும் உரைக்கப்படுகிறது. உணர்ந்து பார்த்துத்தான் இதனையே மெய்மை என்றும் சொல்லப்பட்டுள்ளது (Sundaramoorthy, 1985).

## முதற்பொருள்

நால்வகை நிலமும், அறுவகைப் பொழுதின் இயல்புதான் முதற்பொருளாகக் கொள்ளப்படுகிறது. இது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், போன்றவையும் இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம் ஆகிய ஆறு பொழுதுகளும் சுழற்சிமுறையில் அமைந்திருந்தன என்றும் சூத்திரம் உணர்த்துவது. அதாவது முதற்பொருள் என்பது அதனுடைய மெய்மைத் தன்மையிலிருந்து விலகாமல், அப்பொருள் நிலை இருந்து சிதைந்துவிடாமல் இருப்பதே. அவை சிதைந்துவிட்டால் அவை முதற்பொருளில் இடம்பெறாது எனறும் நிலத்தின் இயல்பு முதற்பொருள், பொழுதின் இயல்பு முதற்பொருள் ஆகும்.

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்

இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே" (Chidambaram Pillai, 1928)

இவ்வித நில இயல்பு நிலைகளை, உணர்ந்தோர் சொல்லும் நெறியாகும். இப்பொருள் அவற்றின் இயல்பு நிலையிலிருந்து, அதன் தன்மையிலிருந்து சிதைந்துவிட்டால் அவை முதற்பொருள் இல்லை.




இந்நான்கு நிலங்களின் இயல்பில் இருந்துகொண்டே இருக்க வேண்டும். ஆனால் இன்றைய சூழலில் இவ்வியல்பில் இருந்து மாறுபட்ட நிலையை நாம் கண்முன் காணமுடிகிறது. காடும் உறையவில்லை, மலையும் குளிர்ச்சியாக, கருமையாக இல்லை, மிகுதியான நீர்பரப்பும் ஓடிக்கொண்டிருக்காத சூழலும், கடலில் பெரும் மணல் மிகுதியான சூழலும் இல்லை. ஆகவே இந்நான்கு நிலத்தின் இயல்புகளில் இருந்து திரிந்து காணப்படுகிறது. முதற்பொருள் இயல்பில் இருக்கும்போது அதற்கான சில விரிவுகளைக் காண சூழ்நிலையை நாம் பெறவேண்டும். அது கருப்பொருளாகப் பரிணமித்து இருக்கிறது.

## கருப்பொருள்கள்

இயல்பில் திரியாத முதற்பொருள் கொண்டு விளையும் வினையே கருப்பொருளாகக் விளக்கப்படுகிறது.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப"

நிலத்தின் தெய்வம், உணவு போன்றவற்றோடு, 'மா' என்ற ஓரெழுத்து ஒரு மொழி சொல் மனிதரையும், விலங்குகளையும் குறிக்கின்றது. மனிதன் என்பது விலங்கினத்தின் மூலம் பெறப்பட்ட ஒன்றாக மெய்மை இங்கு உணரப்படுகிறது. மரம், பறவை, பறை என்ற இசைக்கருவி, செய்தியென்ற ஒழுங்கு முறையையும், யாழ் என்ற பொருளையும் பகுதியாக கொண்டும், அதனோடு பிறவற்றையும் சேர்த்து வரும் 'கரு' என்ற மெய்மைச் சொல்லைக் கொண்டு எடுத்துரைக்கிறது. 'கரு' என்ற சொல் நிலமும், பொழுதும் இயல்பாக இருக்கும்பொழுது, ஒவ்வொரு நிலத்துக்குரிய உயிரினங்கள், மனித வாழ்க்கையின் செயல்பாடுகள் கருவாக இருந்துக் கொண்டு காலத்திற்கேற்ப வடிவ மாற்றங்களை அடைகின்றது (Chidambaram Pillai, 1928).

(எ. கா) 'சேயோன்' என்ற சொல் கருவாகி இருந்த காலத்திற்கேற்ப வடிவமாற்றங்களை அடைந்துள்ளது என்பதை நாம் காண்கிறோம். இன்று முருகன் என்ற சொல்லில் கையாளப்படுகிறது.

## உரிப்பொருள்

உரித்தானப் பொருளைக் குறிக்கிறது. இவ்வுரிப்பொருளுக்குரிய ஐந்து திணைகள், ஐவகை நிலங்கள் என்பது தொல்காப்பியர் எடுத்தியம்பாத கருத்தாகும்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்

ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை

தேருங்காலைத் திணைகுரியப் பொருளே"

இந்நூற்பாவில் கூறப்பட்ட ஐவகை உணர்ச்சிகளும், நான்கு வகை நிலங்களுக்கு அறுவகை பொழுதுகளுக்கும் உரியதாக வருகின்றன. சங்கப் பாடல்களில் 'பிரிதல்' பற்றி பல்வேறு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது. நிலமும், பொழுது இயல்பில் திரியக்கூடாது என்ற நெறியினை பிறழ்ந்து திரிந்து வருவது என்பதும் இயல்பு. ஆதலால் 'பாலை' என்றொரு நிலம் உருவாகி விடுகிறது. இதற்கான உணர்ச்சி அவ்வப்பொழுது எழுந்து மறைந்து விடும், நிலையான உணர்ச்சி பெறுவதில்லை. கலித்தொகையில் இதற்குரிய மாந்தர்களாக 'ஆறலைக் கள்வர்கள்' என்று பதிவு செய்துள்ளது. ஆகவே 'பாலை' என்றொரு நிலம் இடம்பெறாமல் 'நடுவண் திணை' என்று குறிப்பிட்டு எழுவகைத் திணையாகக் குறிப்பிடுகிறார் (Chidambaram Pillai, 1928).

'பாலை' என்பது நிலத்திற்கான உணர்ச்சிப் பிரிதல் எனும் உரிப்பொருள். இது வாழ்வியலில் நிகழும்போது இடரினை அளிக்கிறது. அதனால் அரிதாக ஏற்படக்கூடியதாக இருக்கவேண்டும் என்கிற மெய்மையினை உணர்த்துகிறது.

## கற்பு, களவு வாழ்க்கையின் மெய்யியல்

ஆணும், பெண்ணும் காமத்தை மறைந்துக் கொண்டிருத்தல் களவியலில் இறுதியில் வரைதல் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. களவுக்கு அடுத்ததாக கொள்ளப்பட்ட நிலையைத்தான் கற்பு. களவு வெளிப்பட்டு காமத்தில் வரைவு நிகழ்தல் தான் 'கற்பு' எனப்படுகிறது.

"வெளிப்படை வரைதல் வெளிப்படாமை வரைதல்

ஆயிரண்டு ரென்ப வரைதலாறே"

தலைவியை விட்டு பிரிந்து செல்லும் தலைவன், அல்லது கிழவோன் மூன்று காரணங்களுக்காகப் பிரிகின்றான். அவ்வியல்பு நடக்கும்போது களவொழுக்கத்தில் வெளிப்படுத்தாத

நிலையில் தலைவன் பிரிந்து சென்றுவிட்டால் அத்தலைவிக்கு எந்தவிதமான காப்புரிமையும் இல்லை (Chidambaram Pillai, 1928). இதனை

“வரையாது பிரிதல் கிழேவோர் இல்லை”

என்ற சூத்திரத்தின் வாயிலாக ஒருவிதியினையும் கூறி சமூக உறவினையும் பெண்களின் பாதுகாப்பனையும் உறுதிப்படுகின்றது,

“கற்பெனப்படுவது கரணமோடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன், கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்

கொள்வதுவே”

களவில் யாரோடு யார் வேண்டுமானாலும் புணரலாம். கொடுப்போர், கொள்வோர் ஒத்த மரபில் இருக்கவேண்டும் என்றும் என்பது கற்பு. கொடுப்போர் இன்றியும் ‘காரணம்’ நிகழலாம். உடன்போக்கு போயியும் காரணம் தோன்றும். களவில் பொய்யும், வழும் தோன்றி உறவாடும் போது அங்கு ‘கரணம்’ நிகழ்கிறது. களவில் பொய்யுரைத்தால் கற்புக்கு வந்து விடுவார்கள் என்பது இக்கருத்தாகும் (Chidambaram Pillai, 1928).

ஆகவே களவில் இருக்கும்போது உண்மையுடன் புணர்ந்தவர்கள், பொய்யும் வழுவும் அதிகமாகும் போது கற்பு நெறிக்கு வந்து விடுகிறார்கள். இக்களவில் வேட்டுவர்ஆயர், மீன் பிடிப்பவர், உழவர் ஆகியோர் தான் அதிகளவில் ஈடுபட்டார்கள் என்பதால் அவர்களிடம் உண்மைத்தன்மை வலிமையாக இருந்தது என்றும், அரசர், அந்தணர் போன்றோர் தன் இயல்பான உணர்ச்சியில் இருந்து விலகி அரசுத்தொழில், அந்தணர் தொழில் செய்து வந்தனர் என்றும் மெய்மை நமக்கு உரைக்கிறது. ‘களவு’ என்பதே இங்கு உண்மையாகச் சுட்டப்படுகிறது. உயர்ந்தோரிடம் களவு என்பது குறைவாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப”

‘கற்பு மணம்’ என்பது உயர்ந்தோர்களிடம் நிகழக்கூடியது. இவற்றில் சிறப்பான மரபு ‘களவு’ என்பது கொள்ளப்பட்டுள்ளது (Chidambaram Pillai, 1928).

## முடிவுரை

‘மெய்மை’ என்பது உணர்வு, சிந்தனை, வாழ்க்கை, சமூகம் ஆகியவற்றினை உள்ளடக்கிய ஓர் கட்டுக்கோப்பான கருத்துகளே ஆகும். எச்சிந்தனையும் ஏதோவொரு காலத்திற்கு மட்டும் பொருந்தக்கூடிய குறுகிய மனநிலை யொழித்த சிந்தைய விடுத்து எக்காலத்திற்கும், எல்லோருக்கும் பொருந்தக்கூடியதாக அமையவேண்டும் என்பது மெய்மையின் உணர்வாகும். தொல்காப்பியத்தில் ஒரே சூத்திரத்தில் இவ்வுலக இயல்பினையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கி வரைந்துள்ளார். தமிழ்கூறு நல்லுலகத்துக்கு தனது நாட்டின் எல்லை முதல் அவர்களுடைய சமூக சிக்கல்கள் வரைக்கும் அனைத்திற்குமான விதியோடு விதிவிலக்கையும் கூறியுள்ளார். இடம்பெற்றுள்ள அனைத்து சூத்திரங்களிலும் மெய்யுணர்வு மேலோங்கியும், அடிப்படையில் நிகழ்ந்தவற்றை மாறுபடாமல் அறிவுறுத்தியும் தனது சூத்திரங்களை வடிவமைத்துள்ளார். நிலத்தின் இயல்பு முதற்கொண்டு, மனித மனத்தின் இயல்பு வரை மெய்மை உணர்வை கற்றறிந்து இச்சமூகத்திற்கு நமக்கு பின் வாழும் மனித இனத்திற்கும் பின்பற்றக்கூடியவற்றையும் விளக்கியுள்ளார். இவ்வியல்பு நிலையில் இருந்து விலகிய சமூகச்சூழலை ஏற்படுத்தினால் இவ்வுலகம் அழிவுக்கு ஆட்படும் என்ற எச்சரிக்கையுணர்வினையும், உண்மை நெறியில் இருந்து மாறுபடாமல் வாழவேண்டும் என்ற அறிவுரையும் இங்கு வழங்கப்படுகிறது. ஒரு மனிதனின் ஒழுங்கற்ற செயலாகக் கருதப்பட்ட ‘களவு’ என்பது ‘சிறப்பு என மொழிப’ என்று சொல்லோவியத்திற்கு இடம் கொடுத்து மெய்யியல் கூறுகளை நமக்கு உணர்த்துகிறது. மனித

இனத்தினைச் சுற்றியுள்ளது முப்பொருள்கள் தான். (முதல், கரு, உரி) சமூகத்தின் கருத்தியல் வெளிப்பாடு ஆகும். இக்கருத்தியல் சிதைந்து போனதால், ஊழிக் காலத்தில் தொல்காப்பியம் காட்டிய ஆதி மெய்யிருந்து விலகியதே இவ்அழிவு நிலைக்கு காரணம் என்ற கருத்தும் நமக்கு புலப்படுகிறது.

## References

Chidambaram Pillai, V.O. (1928) Tolkappiyam porullathikaram (Agathinaieyal, Purathinaieyal) Velaiyutham printing press, Thoothukkudi, India.

Sivanda Moorthy, K. Antordias, K. (1998) Philosophy, Ambal Publication, Puthur, Jaffna, Srilanka.

Sundaramoorthy, K. (1985) Tolkapiyam porulathikaram (Kalaviyal karbiyal, poruliyal) Annamalai University, Chidambaram, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License